# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2106/2 - 2019 ජනවාරි මස 14 වැනි සඳුදා - 2019.01.14

*2106/2 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LND/ACQV1/D3/32(1).

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2016/VE/249.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரனாயக பிரதேச செயலாளர் பிரிவின் கங்ஹதபாலாதா சிறு பிரிவு, இல. 45டி, நாரங்கம்மன கிராம அலுவலர் பிரிவின் நாரங்கம்மன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.06.11 ஆந் திகதியுடைய ஆ. கி. கே. 3600 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, எனக் காட்டப்பட்டுள்ள ஏறத்தாழ 4.2271 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய அம்பதெனிய வத்த (கவிலிபிடிய பகுதி) அல்லது போயகொட ஹேன்யாய எனும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

*1.* **துண்டு இல. 01 - காணியின் பெயர்: அம்பதெனிய வத்த (கவிலிபிடிய பகுதி) அல்லது போயகொட ஹேன்யாய; விஸ்தீரணம் : 4.2271 ஹெக்டயார்.**

வடக்கு: பாதை மற்றும் அம்பதெனிய வத்த; கிழக்கு: பாதை; தெற்கு: வசந்தகம மற்றும் பாதை; மேற்கு: பாதை.

**வேறு விபரம் :** 421 ஆவது ஆரம்ப வரைபடத்தின் 1078 காணித் துண்டின் பகுதி. காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை கோருபவர்கள், முகாமைத்துவப் பணிப்பாளர், கேகாலை பெருந்தோட்ட கம்பனி, இல. 310, நாவின்ன, மஹரகம மற்றும் பணிப்பாளர் காணி சீர்திருத்த ஆணைக்குழு, இல. சி 82, ஹெக்டர் கொப்பெகடுவ மாவத்த, கொழும்பு 7, காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந்திகதி மு.ப. 10.00 மணிக்கு, அரனாயக பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரனாயக்க.

பிரதேச செயலகம்,
அரனாயக்க,
2019, சனவரி 10.

2 - 17

1A - G 29254 - 21 (2019/01)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LAND/ACQV1/D3/44.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2016/VE/441.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரனாயக பிரதேச செயலாளர் பிரிவின் கன்ஹுதபாலாதா சிறு பிரிவு, இல. 47டி, கலுகல கிராம அலுவலர் பிரிவின் கலுகல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.06.06 ஆந் திகதியுடைய ஆ. கி. கே. 3594 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, எனக் காட்டப்பட்டுள்ள ஏறத்தாழ 0.4458 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய தெபத்கமவத்த (கலுகல) பகுதி எனும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

**1. துண்டு இல. 01 - காணியின் பெயர் : தெபத்கமவத்த (கலுகல) பகுதி; விஸ்தீரணம் : 0.4458 ஹெக்டயார்.**

வடக்கு: பிலிதெனியஹேன்யாய, அறுவி மற்றும் பாதை; கிழக்கு: அறுவி; தெற்கு: அறுவி மற்றும் தெபத்கமவத்த (கலுகல) பகுதி; மேற்கு: தெபத்கமவத்த (கலுகல) பகுதி மற்றும் பிலிதெனிய ஹேன்யாய.

**வேறு விபரம்** : 541 ஆவது ஆரம்ப வரைபடத்தின் y68 (T.P. 177470) காணித் துண்டின் பகுதி. காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை கோருபவர்கள், காணி சீர்திருத்த ஆணைக்குழு, காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, அரனாயக பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரனாயக்க.

பிரதேச செயலகம்,
அரனாயக்க,
2019, சனவரி 10.

2 - 18